# <u>RECORD OF DEPOSITION OF WITNESS</u>

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Case No.** | **:** | I.A.No. 92 of 1996 in O.S.No. 81 of 1996 | **CNR No.** | **:** | TNKI13-000001-1972 |
| **Name** | **:** | சிவலிங்கம் | **Father's Name** | **:** | ராமசாமி |
| **Witness for** | **:** | மனுதாரர் | **Calling** | **:** | PW2 |
| **Age** | **:** | 55 | **Village** | **:** | திருப்பூர் |
| **Taluk** | **:** | திருப்பூர் | **District** | **:** | திருப்பூர் |
| **Start Time** | **:** | 03.05 PM | **End Time** | **:** | 03.47 PM |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 15.04.2025 administered by Thiru. G. Amar Anand, B.A.LL.B (Hons), LL.M, District Munsif, Uthangarai.

**<u>10 முதல் 12 எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

(1) என்ன இடப்பிரச்சனை சம்மந்தமாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் ராமகவுண்டர் மற்றும் சக்திவேல் இடையே உள்ள இடப்பிரச்சனை சம்பந்தமாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். பிரச்சனையில் உள்ள இடத்தின் சர்வே எண் மற்றும் அளவுகள் தெரியுமா என்றால் தெரியாது. பிரச்சனை நடக்கும்போது ராமகவுண்டரும் அங்கு தான் இருந்தாரா என்றால் ஆமாம். எனது பிரமாண பத்திரத்திலும் இடப்பிரச்சனை என்று தான் சாட்சியம் அளித்துள்ளேனா என்றால் ஆமாம். ராமகவுண்டரின் அம்மா பெயர் என்ன என்றால் சாமாத்தம்மாள் ஆகும். நான் சொல்லும் பிரச்சனை எப்போது நடந்தது என்றால் 02.03.1987 ஆகும். சாமாத்தம்மாள் யாருக்காவது ஆவணம் எழுதினார்களா என்றால் ராமகவுண்டருக்கு பத்திரம் இல்லாமல் ஒரு காகிதத்தில்

எனக்குப்பின்னிட்டு ராமகவுண்டர் தான் சொத்துக்களை அனுபவிக்க வேண்டும் என்று எழுதிக் கொடுத்தார். அது என்ன பத்திரம், கிரைய பத்திரமா என்றால் இல்லை, ஒரு காகிதத்தில் எழுதிக் கொடுத்தார். நான் சொல்லும் காகிதத்தில் என்ன விவரங்கள் எழுதப்பட்டது என்றால் எழுதி படித்து காண்பித்தார்கள் அதில் எனக்கு பிறகு ராமகவுண்டர் அனுபவிக்க வேண்டியது என்று எழுதியிருந்தது. அந்த சொத்து சாமாத்தம்மாளுக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றும் அதைப்பற்றி அந்த காகிதத்தில் எழுதப்பட்டதா என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அந்த காகிதத்தில் எவ்வளவு சொத்து குறிப்பிட்டு சொல்லியிருந்தார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. சாமாத்தம்மாள் குறிப்பேடை பார்த்து சொன்னதாகவும் அதை எழுதியதாக சாட்சியம் அளித்துள்ள நிலையில் அது என்ன குறிப்பேடு என்று தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி உயில் பத்திரம் எழுதும்போது யார் யார் உடன் இருந்தார்கள் என்றால் 6, 7 நபர்கள் இருந்தார்கள் அவர்கள் ராமச்சந்திரன், மேகநாதன், ராமு, ராமகவுண்டர், அவரது மனைவி மற்றும் சிலர் இருந்தார்கள் அதில் 4 பேர் கையொப்பம் செய்தார்கள். மேற்படி நபர்களின் பெயர்கள் எவ்வாறு தெரியும் என்றால் அவர்கள் கையொப்பம் செய்யும் பொழுது ராமகவுண்டர் அவர்களது பெயர்களை சொல்லி எனக்கு அறிமுகப்படுத்தினார். அந்த காகிதத்தை யார் எழுதினார்கள் என்றால் ஒரு பாய் ஒருவர் எழுதினார், அவர் பெயர் தெரியாது. அவர் பெயர் சொல்லவில்லையா என்றால் அவரை பாய் என்றுதான் அழைத்தார்கள்.

(2) சாமாத்தம்மாள் எப்போது இறந்தார் என்றால் எனக்குத் தெரியாது. உயில் பத்திரம் எழுதும் போது சாமாத்தம்மாள் என்ன நிலையில் இருந்தார்

என்றால் நன்றாகத்தான் இருந்தார். அப்போது சாமாத்தம்மாளுக்கு என்ன வயது என்றால் 60 – 65 மேல் இருக்கும். அந்த வயதில் நல்ல மனநிலையில் இல்லை என்றும், ராமகவுண்டர் போலியாக தயாரித்த ஆவணத்திற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் உயில் பத்திரம் எழுதப்பட்டிருந்தால் நான் அங்கு இருந்திருப்பேன் என்றும், அதன் விவரங்கள் என்கு நன்கு தெரிந்திருக்கும் என்றும் சொன்னால் சரியல்ல. ராமகவுண்டர் உயில் எழுதும்போது அங்கு தான் இருந்தார் என்றும், உயிலில் என்ன விவரங்கள் எழுதினார்கள் என்று அவருக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான்.

<u>9–ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை.</u>

(3) நான் சிவலிங்கம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அதற்கான சான்று வைத்துள்ளேனா என்றால் தற்போது இல்லை, அதை ஒப்படைக்க தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். நான் எப்போது பிறந்தேன் என்றால் 1972-ம் வருடம் மாசி மாதம் 6 அல்லது 7 தேதி இருக்கும். எனது பிறந்த தேதியை நிரூபிக்க ஆதாரம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு எத்தனை வயது இருக்கும் என்று பிரமாண பத்திரம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் 54 – 55 இருக்கும் என்று சொன்னேன், வழக்கறிஞர் 55 என்று தட்டச்சு செய்தார். நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்கக்கோரி அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. பிறகு எவ்வாறு வந்தேன் என்றால் ராமகவுண்டரின் மகள் எனக்கு 20 வருடம் பழக்கமானவர் ஆவர், அதனால் ராமகவுண்டர் அழைத்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். உயில் எழுதப்பட்டதாக சொல்லும் தேதியில் எனக்கு திருமணம் ஆகியிருந்ததா

என்றால் இல்லை. உயில் எழுதியதாக சொல்லும் தேதியில் எனக்கு என்ன வயது என்றால் 16 இருக்கும். உயில் பத்திரத்தில் சாட்சி கையொப்பம் செய்ததாக சொல்லும் நபர்களை உயில் எழுதியதாக சொல்லப்படும் தேதிக்கு முன்னர் தெரியுமா என்றால் தெரியாது. உயில் எழுதிய தேதியில் ராமகவுண்டர் எனக்கு அறிமுகப்படுத்தியதன் மூலமாக தான் எனக்கு தெரியும் என்றால் ஆமாம். எதற்காக அங்கு வந்திருந்தேன் என்றால் எனது பக்கத்துவீட்டுக்காரரான கருங்குட்டி என்பவருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் அவருக்கு மருந்து பார்ப்பதற்காக என்னை உடன் அழைத்து வந்தார். எங்கிருந்து வந்தோம் என்றால் திருப்பூரில் இருந்து முந்தைய நாள் வந்து இரவு தங்கி மறுநாள் பார்க்க சென்றோம். ராமகவுண்டர் வீடு, சாமாத்தம்மாள் வீடு, சக்திவேல் வீடு ஆகியவை தனித்தனியாக உள்ளன என்றால் சரிதான். ராமகவுண்டர் வீட்டிற்கும் சாமத்தம்மாள் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் அவர்கள் ஒன்றாகத்தான் இருந்தார்கள். உயில் எழுதியதாக சொல்லும் பாயை எனக்கு தெரியாது என்றும் உயில் எழுதும் நேரத்தில் ராமகவுண்டர் அறிமுகம் செய்ததால்தான் தெரியும் என்று சொன்னால் சரிதான். எனது பிரமாண பத்திரத்தில் கையொப்பம் செய்த நான்கு நபர்கள் மற்றும் 3 – 4 நபர்கள் இருந்தார்கள் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். யார் யார் ரேகை வைத்தார்கள் என்றால் சாமாத்தம்மாள் மட்டும் தான் ரேகை வைத்தார், மற்றவர்கள் கையொப்பம் செய்தார்கள். எங்கு எடுத்து வைத்தார்கள் என்றால் வண்டிமையில் வைத்து வைத்தார்கள். உயில் பத்திரத்தை எழுதி முடித்த பிறகு யாரிடம் கொடுத்தார்கள் என்றால் சாமாத்தம்மாள் வைத்துக்கொண்டார்.

(4) ராமகவுண்டர் சொத்துக்களை அபகரிக்க வேண்டும் என்று அவர் மோசடியாக தயாரித்த ஆவணத்தின் பேரில், அவரது மகளுக்கு பழக்கமானவர் என்ற முறையில் அவர் கேட்டுக்கொண்டதன் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எந்த நேரத்தில் கையொப்பம் செய்தார்கள் என்றால் காலை சுமார் 9 – 10 மணி இருக்கும். ராமகவுண்டர் தயார் செய்துள்ள மோசடியான பத்திரத்தின் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் நான் சிவலிங்கம் இல்லை என்றும், உயில் எழுதியதாக சொல்லும் தேதியில் நான் இளவராக இருந்தேன் என்றும் அதனால் எனது சாட்சியம் ஏற்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.

(5) **குறுக்கு விசாரணை முடிவுற்றது.**

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

AMAR ANAND

District Munsif
Digitally signed by AMAR ANAND
Location: Uthangarai

District Munsif
Uthangarai